# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.139/2015

சாட்சி : PW– 2
பெயர் : திரு. கோவிந்தசாமி தேதி :17.02.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு கூடுதல் முதல்விசாரணை பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது )

**கூடுதல் முதல்விசாரணை** :–

வா.சா.–2 மீண்டும் அழைக்கப்பட்டு கீழ்க்கண்ட ஆவணங்கள் வாதியின் தரப்பில் கூடுதல் சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டது.

| வ.எண். | தேதி | |
|---|---|---|
| 1. | 07.06.2024 | வா.சா.2 நடத்திவரும் ஸ்ரீபாலாஜி Tea and Cooldrinks கடைக்கு உணவு பாதுகாப்பு துறையால் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழ் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ–15 |

**குறுக்குவிசாரணை** :– (பிரதிவாதிகள் தரப்பில்)

வா.சா.ஆ.15 ஆவணத்தில் ஸ்ரீபாலாஜி Tea and Cooldrinks கடை எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி ரமேஷ் என்ன சங்கதிகளை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதை நான் படித்து பார்க்கவில்லை. வழக்கு சொத்திற்கு யார் பெயரில் கிரய ஆவணங்கள் உள்ளது என்பது எனக்கு தெரியாது. வாதியின் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ச.அடி பாத்தியப்பட்டு உள்ளது அது யார் பெயரில் கிரயமாக உள்ளது என்பது எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி வழக்கு சொத்துகளை வாதி

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

ரமேஷ் மற்றும் அவரது சகோதரர்கள் சுரேஷ், பாலாஜி மைனர்களாக இருந்தபோது அவர்களின் சார்பாக அவர்களின் காப்பாளரான அவரது தாயாரிடமிருந்து 09.02.1987 ல் கிரயம் பெற்றுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் 5 ஆயிரம் ச.அடி நிலத்தை 1ம் பிரதிவாதி மாதேஸ்வரன் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. மாதேஸ்வரன் கிரயம் பெற்ற 5 ஆயிரம் ச.அடிசொத்தில் வாதிக்கும், அவரது சகோதரருக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் ஹோட்டல் கடை வைத்து தொழில் செய்வதாக சொல்லும் சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல. வாதி சொல்லிக்கொடுத்ததன்படி நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.